தொகுதி-௫௫ Vol. 55

பகுதி-௰௨ No. 12

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1991

விகாரி—பங்குனி

MARCH-1960

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உ

உள்ளுறை

1. இளம்பூரணர் எழுத்துரை
ஆ. சிவலிங்கனார் மயிலம். 349

2. டாக்டர் கிராலின் தமிழ் வினைப் பாகுபாடு
மா. இளையபெருமாள், M. A., M, Litt. 355

3, கண்டதும் காதலா?
வீ. ப. கா. சுந்தரம், M. A. 360

4. இருவேறு உலகத்தியற்கை
புலவர் வெ, சி. சீனிவாசன் 365

5. எது திறனாய்வு?
ச. அகத்தியலிங்கம், M. A, B. Sc., 370

6. உலகச் சமயங்கள்
கி, பழனியப்பன் 374

7. சங்கச் செய்திகள் 380

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்தகலாநிதி. பேராசிரியர். ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி. மதுரை.
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph. D. சென்னை.
4. திரு. பேராசிரியர். பி. சோதிமுத்து. M. A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர். மதுரை.
6. திரு வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர். மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர். மதுரை.
7. திரு. கி. பழநியப்பன், துணைத்தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர். தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருரு Vol. 55	திருவள்ளுவர் ஆண்டு 1991 விகாரி–பங்குனி 1960 — March	பகுதி. ௧௨ No. 12.

இளம்பூரணர் எழுத்துரை

(ஆ. சிவலிங்கனார், மயிலம்.)

1. புணர்மொழிக் குற்றியலுகரம்

உயிர் எழுத்துக்களுள் குற்றெழுத்துக்கள் ஓர் அளபு இசைக்கும். நெட்டெழுத்துக்கள் ஈரளபிசைக்கும். இவைகள் மெய்களுடன் சேர்ந்து உயிர்மெய்களாகவரினும் அம் மெய்களுக்கு அளபு இன்றித் தத்தம் அளபுகளிலேயே யிசைக்கும். இவைகளுள் சில தத்தம் அளபுகளுள் குறைந்தும் மிக்கும் இசைக்கும் இடங்களும் உண்டு. அவற்றுள் இ, உ என்ற இரண்டு உயிர்க் குற்றெழுத்துக்களும் மெய்களுடன் சேர்ந்து வரும்போது சிலவிடங்களில்மட்டும் தமக்குரிய ஓர் அளபில் குறைந்து அரை அளபில் வரும். அவ்வாறு வருவனவற்றைக் குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பர். அவற்றுள் குற்றியலுகரம்பற்றித் தொல்காப்பியர் கூறிய ஒரு நூற்பாவின் உரைபற்றி இளம்பூரணர் கருத்து யாது என்பதில் ஐயம் ஏற்படுகின்றது. அதை விடுவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாம்,

குற்றியலுகரமானது நெட்டெழுத்தின் பின்னும் தொடர்மொழிகளின் இறுதியிலும் வல்லெழுத்து ஆறனையும் ஊர்ந்துவரும். நாகு, வரகு, கொக்கு, கரும்பு, மார்பு, எஃகு என்பன எடுத்துக்காட்டுகள். இவ்வாறன்றிப் பிறவிடங்களில் வரும் உகரங்களும் தனித்துவரும் உகரமும் அளபிற் குறையாமல் வருதலால் முற்றியலுகரங்களாம். நுந்தை என்ற முறைப்பெயரில் முதலில் உள்ள உகரமும் குற்றியலுகரம் எனப்படும். இது மொழிமுதற் குற்றியலுகரம் எனப்படுதலின் முன்னையன மொழியிறுதிக் குற்றியலுகரம் எனப்படும்.

மொழியிறுதிக் குற்றியலுகரம் ஒருமொழிக்கண்ணே 'வருவது மட்டுமன்றிப் புணர்மொழியிடத்தும் வரும். ,கொக்கு' என்பது ஒருமொழிக் குற்றியலுகரம். இது 'கொக்குக்கடிது' எனப் புணர்மொழியிடத்து வரும் போதும், 'கொக்கு' என்ற சொல்லின் இறுதி உகரம் குற்றியலுகரமாகவே வரும். இதைத் தொல்காப்பியர்,

இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான (தொல். எழு. 37)

என்றார். இளம்பூரணர் கூறிய உரைக்கு அதாவது மேற்சொன்ன கருத்துக்கு மாறாக நச்சினார்க்கினியர் உரை கூறினார்.

"அவ்வுகாம் ஒருமொழியுள் அன்றிப் புணர்மொழியிடைப்
படின் தன் அரைமாத்திரையினும் குறுகும் இடனும் உண்டு;
அதற்கு இடனும் பற்றுக்கோடும் யாண்டுப் பெறு
வதெனின் அதன் புணர்ச்சி முறைமை யறியும் குற்றிய
லுகரப் புணரியலுள்"

என அவர் எழுதினார். அவர் கருத்து, 'ஒருமொழிக் குற்றியலுகரம் புணர்மொழியிடத்தில் தன் அரைமாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாகவும் வரும்' என்பதாம். 'கொக்குக் கடிது, என்றவிடத்துக் குற்றியலுகரம் கால் மாத்திரை பெற்றது என்பர். அவர், இந்நூற்பா நுதலியது பற்றி எழுதியபோது "குற்றியலுகரம் புணர்மொழிக்கண் தன்

அரைமாத்திரையிற் குறுகிவரும் என்கின்றது'' என எழுதினார். இளம்பூரணர்,

> "இது குற்றியலுகரம் புணர்மொழியுள்ளும் வரும் என்பது உணர்த்துதல் நுதலிற்று''

என எழுதினார். இளம்பூரணர் கருத்தும் பொருத்தமானதே.

ஆசிரியர் தொல்காப்பியர் குற்றியலிகரம்பற்றிக் கூற வந்தபோது ஒருமொழிக்குற்றியலிகரம் (கேண்மியா) பற்றிக் கூறிப் பின்னர்,

> புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
> உணரக் கூறின் முன்னர்த் தோன்றும் (எழு. 35.)

எனப் புணர்மொழிக் குற்றியலிகரம் பற்றிக் கூறினார். அவ்வாறே ஒருமொழிக்குற்றியலுகரம் முன்னர்க்கூறிப் (எழு. 36) பின்னர்ப் புணர்மொழிக் குற்றியலுகரம் கூறினார் (எழு. 37) எனக்கோடல் சிறக்கும். ஆதலின் "இடைப் படிற் குறுகும்'' என்ற நூற்பா இளம்பூரணர் கூற்றுப்படிப் புணர்மொழிக்குற்றியலுகரத்தை நுதலியதேயன்றி நச்சினார்க்கினியர் கூற்றுப்படிக் குற்றியலுகரம் புணர்மொழியிடத்து அரைமாத்திரையிற் சுருங்கி வரும் என்பதை நுதலியதாகக் கொள்வதற்கில்லை.

குற்றியலிகரம் புணர்மொழியுள்ளும் வரும் என்ற நூற்பாவில் "புணரியல் நிலையிடைக் குறுகலு முரித்தே'' என்ற தொடரைப் "புணரியல் நிலையிடையும் குறுகல் உரித்து'' என மொழி (உம்) மாற்றி உரைத்த முறையிலேயே, புணர்மொழிக் குற்றியலுகரம் பற்றிய நூற்பாவிலும் "இடைப்படிற் குறுகும் இடனுமாருண்டே'' என்ற வரியை, "இடைப்படினும் குறுகும் இடன் உண்டு'' என மொழி (உம்) மாற்றியுரைத்தார் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் புணர்மொழிக் குற்றியலிகர நூற்பாவில் மட்டும், 'குறுகலும் என்னுமிடத்து உம்மையை நிலையிடையும்

என மாறிக் கூட்டுக" என்றார். ஆனால் புணர்மொழிக் குற்றியலுகர நூற்பாவில் இருந்தவாறே உரையெழுதிச் சென்றார், மொழிமாற்றின் தன் கருத்துக்கு மாறுபடும் ஆதலின்.

இனிப் புணர்மொழிக் குற்றியலுகரத்துக்கு இடனும் பற்றுக்கோடும் கூறியபோது இருவரும் ஒத்த கருத்தினராக ஆயினர். இளம்பூரணர்,

> வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
> தொல்லை யியற்கை நிலையலும் உரித்தே" (எழு. 410)
> என்பதனுள் வல்லொற்றுத் தொடர்மொழியும் வல்
> லெழுத்து வருவழியும் இடம். அவ்வல்லொற்றுத்
> தொடர்மொழியீற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு"

என இளம்பூரணர் எழுதியவாறே நச்சினார்க்கினியரும் எழுதினர். என்றாலும் 'வல்லொற்றுத் தொடர்மொழி' என்ற நூற்பாவிற்கு இருவரும் வேறு வேறு உரை கொண்டனர். நச்சினார்க்கினியர், குற்றியலுகரம் தன் அரைமாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையில் வரும் என்பதற்கேற்ப உரை யெழுதினார். அவ்வுரை பற்றி யாதோர் விளக்கமும் தேவையில்லை. இளம்பூரணர்,

> "வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து முதல்
> மொழி வருமொழியாய் வருமிடத்து முன் கூறிய
> இயற்கை நிற்றலும் உரித்து"

என உரையெழுதினார். இவ்வுரையின் கருத்து யாதென்றே புலப்படவில்லை. இவ்வுரையை விளங்கிக் கொண்டால் புணர்மொழிக் குற்றியலுகரம்பற்றிய "இடைப்படிற் குறுகும்" என்ற நூற்பாவிற்கு இளம்பூரணர் கருத்தையும் விளங்கிக் கொள்ளலாம்;

குற்றியலுகரப் புணரியலில் "வல்லொற்றுத் தொடர் மொழி" என்ற நூற்பாவுக்கு முன்னர் மூன்று நூற்பாக்கள் உள. அவை,

ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்
ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன் (எழுத். 407)

அவற்றுள்,

ஈரொற்றுத் தொடர்மொழி யிடைத்தொட ராகா (408)

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா விறுதியும் உகரம் நிறையும் (409)

என்பனவாம். "ஈரெழுத்தொருமொழி" என்ற நூற்பாவைப்பற்றி "இத்தலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின் இக்குற்றியலுகரம் வரும் இடத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று" என்றெழுதினர் இளம்பூரணர். அவர் கருத்து, இந்நூற்பாவில் உகரம் குறுகிவரும் இடம் ஆறு என்று சொல்லப்பட்டதே ஒழிய அவ்வாறிடத்தும் வரும் உகரம் குறுகித்தான் வரும் என்று சொல்லப்படவில்லை' என்பதுதான். அதனுலேயே, 'அல்லது கிளப்பினும்" என்ற நூற்பாவில் "இது எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் நுதலிற்று" என்று எழுதினர். அதாவது, "ஈரெழுத்தொருமொழி" என்ற நூற்பாவில் முடிந்த கருத்தில் ஒரு கருத்தை மறுப்பதாம் இந்நூற்பா என்பது அவர் கருத்து. "அல்லது கிளப்பினும்" என்ற நூற்பாவின் பொருளாக, "அல்வழி வேற்றுமையிலும் நெடிற்றொடர் முதலிய ஆறு ஈற்று உகரங்களும் குற்றியலுகரங்களாகவே நிறைந்து நிற்கும்" எனப்பொருள்கொண்டார். எனவே "ஈரெழுத்தொருமொழி" என்ற நூற்பா உகரம் குறுகும் இடம் கூறிய நிலையில் இருப்பதால், அவ்வாறீற்றிலும் உக்ரம் குறுகியும் வரலாம், குறுகாதும் வரலாம் என்பது பெறப்படும். இவ்விரண்டு நிலைகளில் "அல்லது கிளப்பினும்" என்ற நூற்பாவால் ஒன்று மறுக்கப்பட்டது. அதாவது குறுகாது வரும் என்பதில்லை; எல்லா விறுதியிலும் குறுகியேவரும் என்றுரைத்துக் குறுகாதும் வரும் என்பது மறுக்கப்பட்டது.

அடுத்து "வல்லொற்றுத் தொடர்மொழி" என்ற நூற்பா பற்றிக் கூறியபோதும் "இது எய்தியது ஒருமரு

ங்கு மறுக்கின்றது'' என்றே கூறினர். இதன் கருத்து அல்லது கிளப்பினும் என்ற நூற்பாவால் எல்லா விறுதியிலும் உகரம் குறுகியே வரும் என்பது கூறப்பட்டது; ஆனால் வல்லொற்றுத் தொடர்மொழியீற்று உகரம் மட்டும் வல்லெழுத்து முதல்மொழி வருமொழியாய் வருமிடத்துத் தன் பழைய நிலையில் குறுகிவருதலும் உரித்தாம். (உம்மையால் குறுகாது வருதலும் உரித்தாம்) ஆதலின், வல்லொற்றுத் தொடர்மொழியில் மட்டும் இரண்டு நிலையும் இருத்தலின் (அல்லது கிளப்பினும் என்பதனோடு மாறுபடுதலின்) 'எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்றும்' என்பதாகும்.

'கொக்குக்கடிது' என்பதில் 'கொக்கு' என்பதின் இறுதி உகரம் குற்றியலுகர நிலையிலும் முற்றியலுகர நிலையிலும் ஒலிக்கப்பட்டிருக்க வேண்டும் இளம்பூரணர் காலத்தில். எழுத்தின் ஒலி காலத்துக்குக் காலம் மாறுபடுதல் உண்டு. 'ழ' என்ற எழுத்தின் ஒலி தமிழகத்தின் தென்பகுதியில் 'ள' ஆகவும் வடபகுதியில் 'ய' ஆகவும் ஒலிக்கப்படக்காணலாம். (பழம்-பளம்-பயம்) அவ்வாறே நுணுகி யறியும் நிலையில் வன்றொடர்க் குற்றியலுகரங்கள் வல்லெழுத்து முதல்மொழி வரும்போது முற்றுகரங்களாகப் பெரும்பான்மையிலும் குற்றுகரங்களாகச் சிறுபான்மையிலும் மக்களிடையே ஒலிக்கப்பட்டிருக்கலாம். அதனால்தான் இளம்பூரணர் "வல்லொற்றுத் தொடர்மொழி" என்பதற்கு அவ்வாறு பொருள் கொண்டார். நச்சினார்க்கினியர் தாம் ஒலித்துக்கொண்ட முறைக்கேற்பக் 'கொக்குக் கடிது' என்பதில் 'கொக்கு' என்பதற்குக் கால் மாத்திரை யிருப்பதாகக் கண்டமையால் தம் போக்கில் புணர்மொழியிடத்துச் சிறுபான்மை குற்றியலுகரம் தன் அரைமாத்திரையைவிட்டுக் கால் மாத்திரை பெறும் என்றார்.

இனி, இடனும் பற்றுக்கோடும் கூறவந்தவிடத்து நச்சினார்க்கினியர் குற்றியலுகரம் கால்மாத்திரையிலும் வரும் என்று கொண்டமையால் வல்லொற்றுத் தொடர்மொழி

என்ற நூற்பாவை மேற்கொண்டு காட்டியது பொருந்தும்; இளம்பூரணர் பிறவும் நூற்பாவிருக்க, அதனையே காட்டக் காரணம் யாது என வினவலாம். குற்றியலுகரப் புணரியலில் புணர்மொழிக் குற்றியலுகரம்பற்றிய (புணர்ச்சி விதிகட்குரிய) முதல் நூற்பா ஆதலின் அதனையே காட்டினார். அதனால் பிறவும் கொள்வதில் தடையில்லை.

இதுகாறும் கூறியவாற்றால், தொல்காப்பியர் குற்றியலிகரம் ஒருமொழிக்கண்ணும் புணர்மொழிக்கண்ணும் வரும் என்று கூறியவாறே குற்றியலுகரமும் அவ்விரிடத்திலும் வரும் என்று கூறவேண்டியவராதலின் அதற்கேற்பவே, ''புணரியல் நிலையிடை'' என்ற நூற்பாவும் புணர்மொழியிடத்தும் குற்றியலுகரம் வரும் என்பதைக் கூறவந்ததேயாம் என்பதும், அதற்கு இடமும் பற்றுக்கோடும் ''வல்லொற்றுத் தொடர்மொழி'' என்ற குற்றியலுகரப் புணரியல் நூற்பாவில் வந்தவாறு வல்லொற்றுத் தொடர்மொழியும் வல்லெழுத்து வருவழியும் (இவ்வாறே பிறதொடர் மொழியும் பிறவெழுத்து வருவழியும்) இடம் என்பதும், ஈற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு என்பதும் ஆம் என்பதும் இளம்பூரணர் கொள்கை என அறியலாம்.

டாக்டர் கிராலின் தமிழ் வினைப்பாகுபாடு

[மா. இளையபெருமாள் எம். ஏ., எம். லிட்]

தொல்காப்பியர் தமது பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்தில், தமிழ் அடிச்சொற்களை எக்காரணத்தலோ பாகுபடுத்தவில்லை. வடமொழியின் பேரிலக்கணமாகிய பாணினீயத்தில் தாதுபாடம் ஓர் அங்கம் என்பது அனைவரும் அறிந்ததே. வீரசோழியத்தின் தாதுப்படலத்தில் தமிழ்

மொழியிலுள்ள அடிச்சொற்கள் தமிழ்த்தாது, வடமொழித் தாது, திசைச் சொற்றாது என மூவகையாகப் பாகுபடுத் தப்படுகின்றன. இவ்வகையில் முயற்சிசெய்த பிற்காலத் தாருள் முக்கியமானவர் டாக்டர் கிரால் என்பவர்.

டாக்டர் கிரால் தமிழ் வினையடிச்சொற்களை, அவை ஏற்கும் கால இடைநிலைகளின் அடிப்படையில், மெல்வினை, இடைவினை, வல்வினை என மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பகுக்கின்றார். வகர எதிர்கால இடைநிலை பெறும் வினைப் பகுதிகள் மெல்வினை என்றும் பகர எதிர்கால இடைநிலை பெறுவன இடைவினை என்றும் ப்ப் என்ற ஈரொற்றைப் பெறுவன வல்வினை என்றும் வகுக்கிறார். இம்மூவகை வினை களையும் மறுபடியும் ஏழு உட்பிரிவுகளாகப் பகுக்கிறார். அவற்றுள் நான்கு மெல்வினையிலும், ஒன்று இடைவினையி லும் இரண்டு வல்வினையிலும் அடக்கப்படுகின்றன. அப் பாகுபாட்டுப் பட்டியல் பின் வருமாறு:

I மெல்வினை

	நிகழ் காலம்	இறந்த காலம்	எதிர் காலம்
1.	கிற் அல்லது கின்ற்	த் (ட், ற்)	வ்
2.	,, ,,	ந்த்	,,
3.	,, ,,	இன்	,,
4,	,, ,,	பகுதியின் இறுதி வல் லொற்று (க், ட், ற்) இர ட்டித்தல்.	,

II இடைவினை.

5.	,, ,,	த் (ட், ற்)	ப்

III வல்வினை

6..	க்கிற், க்கின்ற் ,,	த்த்	ப்ப்
7,	,, ,, ,,	ந்த்	,,

விளக்க உதாரணங்கள்

I மெல்வினை

1.	செய்	செய்கிறேன்	செய்தேன்	செய்வேன்	செய்ய
	ஆள், ஆளு	ஆளுகிறேன்	ஆண்டேன்	ஆளுவேன், ஆள்வேன்	ஆள
	கொல், கொல்லு	கொல்லுகிறேன்	கொன்றேன்	கொல்லுவேன், கொல்வேன்	கொல்ல
2.	அறி	அறிகிறேன்	அறிந்தேன்	அறிவேன்	அறிய
3.	ஆக்கு	ஆக்குகிறேன்	ஆக்கினேன்	ஆக்குவேன்	ஆக்க
4.	நகு	நகுகிறேன்	நக்கேன்	நகுவேன்	நக

II இடைவினை

5.	உண், உண்ணு	உண்கிறேன்	உண்டேன்	உண்பேன்	உண்ண
	தின்	தின்கிறேன்	தின்றேன்	தின்பேன்	தின்ன
	கேள், கேளு	கேட்கிறேன்	கேட்டேன்	கேட்பேன்	கேட்க
	கல்	கற்கிறேன்	கற்றேன்	கற்பேன்	கற்க

III வல்வினை

6.	தீர்	தீர்க்கிறேன்	தீர்த்தேன்	தீர்ப்பேன்	தீர்க்க
7.	நட	நடக்கிறேன்	நடந்தேன்	நடப்பேன்	நடக்க

முக்கிய பிரிவுகளில் முதற்பிரிவு இறந்தகால இடைநிலை களைக் கொண்டு நான்கு உட்பிரிவுகளாகப் பகுக்கப்படு கிறது. வகர எதிர்கால எழுத்துப்பெறும் செய், அறி, ஆக்கு, நகு ஆகிய வினைப்பகுதிகள், த், ந்த், இன், பகுதி யின் ஈற்று வல்லின இரட்டிப்பு ஆகியவைகளை முறையே பெறுவது உதாரணமாகக் காட்டப்படுகின்றது. இதே போலத் தீர், நட, ஆகிய வினைப்பகுதிகள் த்த், ந்த், என்ப வைகளை முறையே பெறுவதால் மூன்றும் பிரிவும் இரண்டு உட் பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றது.

டாக்டர் கிராலினது இந்தநிபந்தனைகளுக்குக்காலஎழுத் துக்கள் கட்டுப்படுவதாகத் தோன்றவில்லை. இயல் என்ற வினைப்பகுதி இயன்றான் என்ற வினைமுற்றில் றகர ஒற்றுப் பெறுவதால் கிராலின் முதற் பிரிவின் முதல் உட் பிரிவில் அமையவேண்டும். ஆனால் அதே வினைப்பகுதி இயலியாள் என்ற வினைச்சொல்லில் இகர எழுத்துப் பெறுகிறது. கிரா லின் பாகுபாட்டில் இகரஇடைநிலையைக் காணமுடிய வில்லை என்றாலும் இன் இடைநிலையோடு சேர்த்துக் கொள்ளலாம். அவ்வாறு கொண்டால் ஒரே வினைப்பகுதி, முதற்பிரிவின் முதல் உட்பிரிவிலும் மூன்றும் உட்பிரிவிலும் அமைகின்றது. இவ்வாறே முனை என்ற வினைப்பகுதியும் முனைந்தாள் என்ற வடிவத்தில் 'ந்த்' பெறுவதால் முதற் பிரி வின் இரண்டாம் உட்பிரிவில் அமையும் வினைப்பகுதி முனை இயாள் என்ற சொல்லால் மூன்றும் உட்பிரிவுக்கும் வந்து விடுகிறது. இன்னொரு உதாரணமாகப் புகு என்ற வினைப் பகுதியைக் கொள்ளலாம். புக்கான் என்ற வினைமுற்றால் நான்காம் உட்பிரிவிலும் புகுந்தான் என்ற வினைமுற்றால் இரண்டாம் உட்பிரிவிலும் அமைக்கவேண்டிய நிலை ஏற்படு கிறது. செய்ய என்னும் வாய்பாட்டுவினையைத் தன் பாகு பாட்டுக்குப் பயன்படுத்திய டாக்டர் கிரால் செய்து என் னும் வாய்பாட்டு வினையை ஆய்ந்ததாகத் தெரியவில்லை. ஒருவேளை, செய்தான் என்னும் வினைமுற்று பெறுகின்ற

இடைநிலையைத்தான் 'செய்து' என் வாய்பாட்டு வினையும் பெறும் என்று அவர் கருதியிருக்க வேண்டும். எவ்வாறாயி னும் அறீஇ, அறிந்து; உடீஇ, உடுத்து; உணீஇ, உண்டு; செலீஇ, சென்று; பெறீஇ, பெற்று; மிகிஇ, மிகீகு; முதலிய வினைச் சொற்களில் த், ட், ற், ஆகியவையும் இகரமும் உறழ்ந்து வருவதால் டாக்டர் கிராலின் பாகுபாட்டின் அடிப்படையின் ஒரு பகுதியான இறந்தகால இடைநிலை, பாகுபாட்டுக்குப் பயனற்றுப்போவதோடு, அதையும் சிதைத்து விடுகிறது.

டாக்டர் கிராலினது முக்கிய பிரிவுகளுக்கு அடிப்படை எதிர்கால எழுத்துக்களே. செய், அறி, ஆக்கு, நகு ஆகி யவை வகர ஒற்றையும், உண், தின், கேள், கல் ஆகியவை பகர ஒற்றையும் தீர், நட ஆகிய வினைப்பகுதிகள் 'ப்ப்' என்ற ஈரொற்றையும் பெறும் சான்றுகள் காட்டப்பெறு கின்றன. வகரம் பெறும் என்று அவர் காட்டிய செய், அறி, ஆக்கு, நகு ஆகிய வினைப்பகுதிகள் செய்ப, அறிப, ஆக்குப, நகுப ஆகிய வினைகளில் பகரம் பெறுகின்றன. பகரம் பெறுவதாக அவர் காட்டிய உண், தின், கேள், கல் ஆகிய வினைப்பகுதிகள் உண்குவார், தின்குவ, கேட்குவ, கற்குவ ஆகிய வினைகளில் வகரம் பெறுகின்றன. இறந்தகால எழுத்துக்களைப் போலவே எதிர்கால எழுத்துக்களும் டாக்டர் கிரர்லின் கட்டுப்பாட்டுக்கு அடங்காது அவரது பாகுபாட்டின் அடிப்படை முழுவதையும் தகர்த்து விடுகின் றன. ஆகவே, டாக்டர் கிராலின் தமிழ் வினைப் பகுதியின் பாகுபாடு முக்கிய பிரிவு, உட்பிரிவு ஆகிய இரண்டிலும் வரையறைப்படாது சிதைந்துபோவதைக் காண்கிறோம்.

கண்டதும் காதலா?

(வித்துவான். வீ. ப. கா. சுந்தரம், M. A., மதுரை.)

(340-ஆம் பக்கத் தொடர்ச்சி)

4. ஆண்டு என்பது வயது; அதாவது பருவம். பன்னீராண்டுக் கன்னிக்கு அறுபதாண்டுக் காளையன் என்றால் இளமையோடு மூப்பு இணையாததாகும். கன்னியைக் காட்டிலும் காளை ஐந்து ஆறு ஆண்டுகள் மூத்திருத்தல் சிறந்த ஒப்புமையே ஆகும். தாய்மைக்குரிய உடல்திண்மையும் வன்மையும் அனைத்து மகளிர்க்கும் பூப்பு எய்தியவுடனே, ஆறிரு ஆண்டிலே அமைந்து விடுவதில்லை. அதனை அறிந்து காலம் வரும்வரை காத்திருந்து, உரிய உடல்நிலை உற்றபின் காதல் மணம் கொள்ளல் வேண்டும்.

5. உருவு:— வனப்புநிறைவடிவம். கண்டாருயிருண்ணும் கண்ணும் அணங்கோ, ஆய்மயிலோ எனும் சாயலும் கடாக் களிற்றின் மேலிட்ட கட்படாம் போன்ற படாம் முலைமேற் றுகிலும் அனிச்சத்தினும் மெல்லிய அடியும் கொண்டு தலைவி காட்சியளிப்பாள். தலைவன் அஞ்சா நெஞ்சுரனும் ஏறுபோற் பீடுநடையுமுடையவனாய்க் காட்சியளிப்பான்.

6. நிறுத்த காமவாயில்:—நிலைநிறுத்தப்பட்ட காமத்திற் கேதுவாகிய ஈர்ப்பு நிலை.

> "நீர் இன்றியமையாவுலகம் போலத் தம்மின்று அமையா
> நம்நயந்தருளி" (நற்றிணை-1)

என்று தலைவி, தலைவன் வேட்கையை யுணர்த்துவதால் இஃது அறியலாகும்.

7. நிறை:—நெஞ்சினைக் கற்பு வழியில் நிறுத்தல் என்று பரிமேலழகர் விளக்கினார். சிறைகாப்பு என்பது பிறர் நின்று காத்தல். நிறை காப்பு என்பது தன்னைத் தானே காத்தல். இத் தற்காத்தலே என்றும் சிறப்புடையது.

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு"

என்றதால் தலைவனுக்கும் இஃது உண்டு. இக்குண முடைமை இருவர்பாலும் திகழின் இன்பம் பெருகுதற்கு வழியாகும்.

8. அருள்:—இதுபிறர் துயர் கண்டு பரிந்து இரங்குதல். (போரிலும் தூதிலும் தன் காலத்தைக் கடத்தித் தலைவியை மறந்திருந்தான். அப்போது தோழி புகன்றாள், "தலைவ, வீரச்செல்வமும் அறிவுச்செல்வமும் செல்வமல்ல. அருட் செல்வமே செல்வம். தன்னைச் சேர்ந்தார்க் கிரங்குவதே சீரிய பண்புச் செல்வம்" என்று.)

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வ மன்று; தன்செய்வினைப் பயனே,
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வமென்பதுவே."

என்பது நற்றிணைச் செய்யுள்.

9. உணர்வு:—உணர்ச்சி என்பது சொல்லாமலே அறிந்து கொள்ளும் திறன்.

"மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி."

பண்பட்ட உள்ளத்தினின்றும் சீரிய உணர்ச்சிகள் எழும்.

"சிறியா ருணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு" (976)

எனும் குறளால் விளக்கம் தெளியலாகும்.

10. திரு என்பது செல்வம்; இங்குப் பணம் பற்றிய தன்று.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து, செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்ற பொருள் பற்றியது. இங்குத் திரு. பேராசிரியர் உரையுள் இதனை 'வினையுளுடைமை' என்றார். அஃதாவது தீவினைக்காலத்தும் செல்வமுடையவர் போலிருத்தல். கொழுநன் வறுமையடைந்தான் எனக்கண்டு தலைவியின் தந்தை வீட்டார் மிக்க செல்வத்தை அனுப்பி நல்லுணவு கொள்ள ஏற்பாடு செய்தார். ஆனால் போதுமென்ற திரு உள்ளமுடையதலைவி, தலைவனுடைமையில் போதுமென மனங் கொண்டு, மறுத்துவிட்டாள் தந்தை சொத்தை.

"கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கு அறல் போல
பொழுது மறுத்துண்ணும் சிறுமது கையளே" [நற் 110]

என்று தலைவியின் அறிவுக் கொள்கை (மதுகை) போற்றப் படுவது காண்க.

நாயகர் பட்சமடி—எனக்கது
ஆயிரம் லட்சமடி.
ஏழையானாலும் எனக்கெஜமானே—
என்றும் அடிமையவருக்கு நானே
கூழையுண்டாலும் எனக்கது தேனே
கொண்டார் இருக்கக் குறை என்ன மானே

என்ற மேதை வேதநாயகர் இசைப்பா சிறந்த எடுத்துக் காட்டாகும்.

ஒத்த காதல் நெறியில் மேற்கூறிய பத்தினையும் முற்றிலும் முதலிலேயே முடிய ஆராய இயலாததால், இயன்ற அளவிற்கு, இன்றியமையா ஒப்புமைகளையேனும் ஆய்ந்தறிந்து காதல் மணம் கொள்ளல் வேண்டும்.

அச்சம் மடம், நாணம் முதலிய இயல்பினள் தலைவி; பெருமை, உரனுடையன் தலைவன். ஆதலால் இவர்க

ளிடையே காதல் முதலில் விதையாகி, முளையாகி, மரமாகிக் காய்த்துப் பழுத்து நிரம்பும். எரிமலைபோன்று திடீரென்று தோன்றிய திடீர்க் காதற் செயல்கள் அமர்ந்த அறிவையும் நெடுங் காட்சியையும் அடிப்படையாகக் கொண்டவையல்ல. படிப்படியாகக் காதல் வளருவதையே தொல்காப்பியக் களவியல் நூற்பாக்கள் முறையே காட்டிச் செல்லும். கண்டும் ஐயம் கொண்டும், பேசுங் கண்களால் ஆசைக் குறிப்புணர்ந்தும் மலர்ந்த வேட்கையானது மேலும் மேலும் முறையே வளர்ந்தோங்கும் நெறியை விளக்கிச் செல்கின்றார். இக் கண்கொண்டு தொல்காப்பிய நூற்பாக்களை வரிசையாகப் படித்தால் இவ்வுண்மையை யுணரலாம்.

தோழியும் தலைவியும் தலைவனைப் புகழும்போதும் உள்ளுறை வாயிலாகக் கருத்தை யுணர்த்தும்போதும் தலைவனது நாடு, துறை, மலை, வரும் வழியில் காணும் இயற்கைக் காட்சிகள், விலங்குகளின் காட்சிகள் முதலியவற்றை அடைமொழியாக்கிக் கருத்தை வெளியிடுவதால், தலைவனைப் பற்றியும் அவனது நாட்டைப் பற்றியும் நன்கறிந்திருந்தனர் என்பது தேற்றம்.

ஆர அமர ஆய்ந்து, ஆழச் சிந்தித்துக் காதலுறவு பூண்டனர் என்பதற்குக் காணும் இலக்கிய எடுத்துக்காட்டு பலவற்றுள் ஒன்று மட்டும் இங்குக் காண்போம்.

32-ஆவது நற்றிணைப் பாடலில் தலைவிக்குக் குறை நயப்புக்கூறியதாகக் கபிலர் பாடியுள்ளார். "தலைவியே! அம்மலைக்குரியவன் நம்மை விரும்பி, என்றும் வருந்துவதாகச் சொல்கின்றான். அது முற்றிலும் உண்மை என்பதை நீ அறிதல் வேண்டும். அவன் வாய்மையே பேசுபவன். நீயும் அவனைக் காணுதல் வேண்டும்; உன்னுடைய சுற்றத்தாருடன் அளவளாவி ஆலோசித்து, அவனைப் பற்றி அறிய வேண்டுவன் எல்லாம் அறிதல் வேண்டும். அவன் மறுத்தற்கு உரியவன் அல்லன். தலைவியே, பெரியோர் ஆராய்ந்து காதல் கொள்வரே யன்றி, காதலித்துப் பின் ஆராய மாட்டார். அதா

வது நாடி நட்பார். ஆனால் நட்டு நாடார்." என்று தோழி தலைவியை ஆய்ந்து, நட்புக் கொள்ளுமாறு துணையாகித் தூண்டுகிறாள்.

"அம்மலைக் கிழவன் நம்நயந் தென்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்
நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவு அறிந்து அளவல் வேண்டும்; மறுதரற்கு
அரிய—வாழி! தோழி! — பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார், தம்மொட்டியோர் திறத்தே" [நற். 32]

கண்டவுடனே காதல் முதிர்வதும், உடனே உடற் புணர்ச்சியில் ஈடுபடுவதும் உண்டு. ஆயினும் அதனிலும் சிறந்து ஆய்வுடன் கூடிய அறிவுணர்வுக் காதல். வெறும் உடலழகு மட்டும் கண்டு கொள்ளும் காதலுறவு நெடுக நிலைக்காது போனாலும் போகும். காதலுறவு உறுதியாய் நெடுக நின்றோங்குதற்கு உடல் இயல்பிலும் உள்ள இயல்பிலும் காணும் ஒற்றுமை பெரிதும் துணைபுரியும்.

களவியலில் பாங்கற்கூட்டம் என்றும் பாங்கியிற் கூட்டம் என்றும் உள்ள இரு பகுதிகளிலும் காதலரின் தகுதியைப் பற்றிய திறனாய்வுரையைக் கேட்கலாம். பாங்கற் கூட்டத்திலே, தலைவன் தேர்ந்தெடுத்த தலைவி, அவனுக்கு ஏற்றவள்தான் என்று பாங்கன் ஆய்ந்து கூறுவான். பாங்கியிற் கூட்டத்திலே, தலைவியை இறுதிவரை காக்கும் பற்றுதலுடையவன்தான் தலைவன் என்று ஆய்ந்து பாங்கி அறிவதனால்தான் தலைவி தலைவன் கூட்டத்திற்கு உடன்படுவாள்.

இதுகாறும் கூறியவற்றால், காதலும் நட்பினைப் போன்று ஆய்ந்துகொள்ளற் குரியது என்பதும் பத்து வகையிலே ஒப்புமையுடையது என்பதும் ஆய்ந்து கொண்ட காதலுக்கு இலக்கியச் சான்றுகள் இவை என்பதும் கண்டோம்.

இருவேறு உலகத்தியற்கை.

[புலவர்: வெ. சி. சீனிவாசன்]

தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

322-ஆம் பக்கத் தொடர்ச்சி:—

திருசேர்க்கும் வழியில் சென்ற நெடுஞ்செழியன் தீமை பல செய்ய நேர்ந்ததை அறிந்தோம். இனி பாரி, தெள்ளியோன் ஆகும் வழியில் ஒழுகினன்; ஆகையால் வள்ளியோனாக வாரி வழங்கினன்; எல்லார் உள்ளங்களிலும் நின்று நிலைபெற்றான்; ஆனால் செல்வ வளம் இழந்தான் என்பவற்றைக் காணவிருக்கிறோம்.

கடையெழு வள்ளல்களில் ஈடிணை இல்லாதவன் பாரி. அவன் தேன் சொரியும் பறம்பு மலையை ஆண்டு வந்தான். வளமிக்க முந்நூறு ஊர்களும் அவன் மலையைச் சுற்றியிருந்தன. அவன் உள்ளம் எளியோர்பாலும், ஏழைகளிடமும் இரக்கங்கொண்டது. மொழியையும், கலையையும் வளர்ப்பதிலே அவன் அளவிலா ஆர்வங்கொண்டிருந்தான். மக்கள் வாழ்விலே இன்பமும், இனிமையும் பொங்கிப் பெருக வேண்டுமென அவன் விழைவு கொண்டான். 'மழையின்றி மாநிலத்தார்க்கில்லை' — என்ற பழமொழியை மாற்றி, 'பாரி இன்றி இப்பாரோர் வாழார்' — என்று அமைக்க வேண்டுமென ஆசை கொண்டான் போலும்.

'வருவாயுள் கால் வழங்கி வாழ்'— என்பர் நம் கவிஞர். அவ்வரையறையையும் கடந்தவன் பாரி, 'செல்வத்துப் பயன் ஈதலே,' துய்த்தலன்று என ஈந்து வந்தான். தன் உடல், உடைமை (ஆவி) உயிர் ஆகிய அனைத்தையும் உலகிற்களித்திட அவன் தயங்கவில்லை. பாவலருக்கும், பாணருக்குமட்டும் வாரி வழங்கியிருந்தால் நாம் அவனைப் போற்றமாட்டோம். எல்லாவற்றிற்கும் மேலாக வறுமைத்

தீயால் வாட்டமுற்றோர்க்கும், துயரால் வருந்தியோருக்கும் அவன் இல்லை என்னாது அளித்தான். கலையில் வல்லவருக்கும், வல்லமை இல்லாருக்கும், நல்லவருக்கும், புல்லிய குணங் கொண்டவருக்கும் அவன் கொடுத்து வந்தான். மக்களும், மாநிலமும் வாழ வேண்டும் என்ற பரந்த மனதால் கொடுத்தான் பாரி; தன் புகழ் பாரெல்லாம் பரவ வேண்டுமென்று அவன் கொடுக்கவில்லை. அவ்வாறு எண்ணிக் கொடுத்திருந்தால் ஆரவாரத் தன்மையோடு கொடுத்திருப்பான். உலகோர் கண்ணில் மண்ணைத்தூவி சிறுகக்கொடுத்துப் பெருகப் புகழ் பெற்றிருப்பான்.

தீயோரும் திருந்தவேண்டும் என ஈந்த அவன் திருந்திய பண்பட்ட உள்ளத்தைப் பாருங்கள். மடவருக்கும், மெல்லியருக்கும் அளித்ததை எண்ணிடும்போது அவன் உள்ளக் கிடக்கையை நாம் தெள்ளிதின் அறியலாம்.

"நல்லவும் தீயவும் அல்ல குவியிணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா ஆங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரிகை வண்மையே" —புறம். 106.

(மெல்லியர்—புல்லியகுணங்கொண்டோர்)

இவ்வாறு பாமரர்கட்கும், படித்தவருக்கும் பொருள்களை வாரி வழங்கினான் பாரி. பொருள்களைக் கொடுத்த தோடமையாது அவ்வள்ளல் தன் ஊர்களையும் பரிசிலருக்கு உரிமையாக்கிட முனைந்தான். கலைஞரும், கவிஞரும் அவன் மாளிகையை முற்றுகையிட்டனர். கலையாலும், கல்வியாலும் விளையும் பயனை அவன் விளங்கக் கேட்டான். பட்டி தொட்டி எல்லாம் படிப்பைப்பெற்றால்..........! அவன் உள்ளம் சீர்மைபெறச் சிந்தித்தது.

அவன் உள்ளபடியே கலையிலே எல்லையில்லா ஆர்வத்தைக் காட்டினான். ஆகையால் அவற்றை வளர்ப்பதற்காகப்

பாணருக்கும், பாவலருக்கும் தன் முந்நூறு ஊர்களை ஒவ்வொன்ருகக் கொடுத்தான். பாமர மக்களிடத்தில் அறியாமையும், செருக்கும் நீங்கவேண்டும்; போரும் பூசலும் ஒழிய வேண்டும்; ஒற்றுமையும், உயர் பொறுமையும் ஓங்கி வளர வேண்டும் என்ற நல்ல எண்ணங்கள் அவன் உள்ளத்தில் நடமாடின. அவன் தெள்ளியோன் ஆக வேண்டுமெனில் இந்நல்லறங்கள் அவன் செயலிலே மிளிரவேண்டுவது அவசியந் தானே.

மக்கள் மட்டும் அல்ல, பகுத்தறிவற்ற செடி கொடிகளும் செழித்து வாழவேண்டுமென அவன் சிந்தை கொண்டான். செடி கொடிகட்கும் உயிர் உண்டு; உயிர் என்ருல் எல்லாம் சமம்தானே! 'காக்கை குருவி எங்கள் சாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' எனப் பாரதி பாடியதைப் போன்று, 'செடி கொடிகள் எங்கள் சாதி' எனப் பாரி எண்ணங்கொண்டான் போலும்!

> "ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
> முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
> படுமணி யானைப் பறம்பிற் கோமான்
> நெடுமாப் பாரி" —புறம் 201.

இவ்வாறு பொருளையும், ஊர்களையும் பாமரருக்கும், பாவலருக்கும் கொடுத்துவந்தான். 'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்'—என்ற பாரதி வாக்கின்படிப் பொருளால் அருள் பாலிப்பாரை உலகில் நாம் பலவிடங்களில் பார்க்க இயலும்.

ஆனுல், உடலாலும், உயிராலும் சேவை செய்வோரை நாம் காண்பதரிது. உயிர்களிடத்து உண்மையான அன்பைச் செலுத்தினுல்தான் உடலாலும் உயிராலும் சேவை செய்ய இயலும். ஆதலின் அச்சேவையே யாவற்றினும் சிறந்ததாம்.

'என்பும் உரியர் பிறர்க்கு' என்று 'அன்புடைமை' என்ற அதிகாரத்திலும் 'நத்தம்போற் கேடும், உளதாகும் சாக்காடும்'

என்று புகழ் என்ற அதிகாரத்திலும் வள்ளுவர் குறித்திடு வதை அறிந்தால் இக்கருத்தை நாம் புரிந்துகொள்ள இய லும்: பாரி எத்தகைய சேவைக்கும் தயாராயிருந்தான் என்ற செய்தியினை வாய்மொழிக் கபிலர் வரைந்து காட்டு கிறார்.

"மூந்நூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டு நீர் பாடினிர் செலினே,"

பறம்பும், பாரியும் தவிர மற்ற யாவும் பரிசிலர் கையிலே உள்ளன. மீதமுள்ள மலையையும் தன்னையும் தந் திடப் பாரி தயங்கானும். பின் அவற்றையும் பரிசிலருக்குக் கொடுத்துவிட்டான் என்று காண்கிறோம். ஈகையின் எல் லையைக் காணவேண்டுமென்று அவனுக்கு ஆசைபோலும். தன் கண்ணெதிரே கலங்குவோரைக் காணத் தாழான்போ லும். இம்மண்ணிலே பொன்னுட்டை நிலைநாட்டிட, அன்பு அரசை அமைத்திட அவன் நசை கொண்டானே? உடலை யும் உலகோருக் களித்திட அவன் உடன்பட்ட செய்தியை வேறு என்னசொல்லி நாம் போற்றுவது ?

" சாரல் வேங்கைப் பூஞ்சினை தவழும்
பறம்பு பாடினரதுவே, யறம் பூண்டு
பாரியும், பரிசிலர் இரப்பின்
வாரேன் என்னான் அவர்வரை யன்னே "

—புறம் 108

பாரி தெள்ளியோன் ஆகும் நெறியில் எவ்வளவு தொலை சென்று விட்டான். நாடு, நகரம் மலைவளம், மாளிகை வளம் — தன்னிடம் எத்தனை உண்டோ அனைத்தையும் அளித்து விட்டானே! பிறந்த போதும் கொண்டு வந்த தில்லை; இறக்கும் போதும் கொண்டு போவதில்லை; எனவே இருக்கும்போது 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பு வோம்' — என முடிவு செய்து அத்தனையையும் கொடுத் தான். இல்லார் இல்லாத உலகை உண்டாக்கும் பொதுமை

வழியை அவன் கடைப்பிடித்து இல்லாதவனானான். பாரி தன்னையும் பிறருக்களித்த செய்தியை எண்ணிடின், அவன் தெள்ளியோனாக வாழ்ந்தான் என்பதைத் தெளிவாக அறியலாம்.

பாரி புகழ் இப்புவன மெங்கும் பரவியது. நாவெல்லாம் பாரி புகழ் பாடுவதில் நசை கொண்டன. புலவர் பாரியைக் காணவும், அவன் கொண்ட கொள்கையை விண்டுரைக்கவும், அவன் கோயில் வந்து மண்டினர். எல்லார் உள்ள மாளிகையிலும் பாரியே கோயில் கொண்டு வாழ்ந்தான். எங்கும் எப்போதும் பாரியின் பெயரும் பெருமையும் பொங்கி எதிர் ஒலிப்பதை எல்லாருங் கண்டனர்.

மாரி மட்டுமா உலகை ஓம்புகிறது? இதோ பாரியும் ....! என்று கவிதை நயத்தைப் பெய்து கபிலர் பாடினார். பாரி ஒருவனையே புலவர் பாடுகின்றனரே, வேறு எவரும் கண்ணில் படுவதில்லையோ? என வினவுவார் போன்று பாரியை ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்று அவர் புகழ்ந்துரைத்தார்.

> "பாரி பாரி யென்று பலவேத்தி
> ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
> பாரி ஒருவனு மல்லன்
> மாரியுமுண்டு ஈண்டுலகு புரப்பதுவே" — புறம், 107.

முடியுடை மூவேந்தரும் பாரிபால் திரும்பினர். 'அழுக்காறு எனும் ஒரு பாவி' அவர்களைப் பற்றியது. நம்மினும் பாரி பெரியனா? போரில் காண்போம் எனப் போர் செய்ய முற்பட்டனர். தன் புகழ் தரணி எங்கும் பரவியது பாரி செய்த பிழையா? சேவை எண்ணத்தால் செல்வத்தை இழந்தான் பாரி. செல்வந் தேய்ந்ததால் படை சேர்த்தானில்லை. படை பலம் இல்லாதவன் போரில் எவ்வாறு வெல்ல இயலும்? நல்லவனாக வாழ்ந்தான் பாரி. ஆனால் வல்லவனாக வாழவில்லை.

எங்ஙனம் இயலும்; நல்லவனாக நடந்தால் செல்வம் நில்லாது; செல்வமிழந்தால் வல்லமை யில்லை. என்னே உலகின் இடர்ப்பட்ட நிலை! வல்லமை யிழந்த பாரியை வெல்ல முயன்ற மூவர் முற்றுகையிட்டனர்; முடிவில் வென்றனர்; பாரியையும் கொன்றனர். பாரி வீழ்ந்தான். அந்தோ! அது மட்டுமல்ல, அவன் பரம்பரையும் வாழ்விழந்தது. வீழ்ந்தது.

பால் பொங்கும் நிலவு. பாரி மகளிர் சோக கீதம் இசைத்தனர்; ''அன்றைய நிலவிலே எங்கள் அன்புத் தந்தை இருந்தார், ஆடிப்பாடினோம். ஆனால் இன்று...... ...... எல்லாம் இழந்தோம்.'' வள்ளலின் மகளிர் வாழ்வை இழப்பதா? கைப்பிடிக்க ஒரு கணவனின்றி கையுற்று நலிவதா? மன்னர் பலரிடம் சென்று மானமிழந்து 'இவர்களை மணந்து கொள்ளு'மென்று கபிலர் கேட்பதா? இது நன்றி கெட்ட உலகமா? இந்நாநிலத்தின் நியதியே இதுதானோ? நாம் சிந்திக்கவேண்டும். (தொடரும்)

எது திறனாய்வு?

(ச. அகத்தியலிங்கம் M. A., B. Sc.)
ஆராய்ச்சி மாணவர் கேரளப் பல்கலைக்கழகம்.

திறனாய்வு என்றால் என்ன? என்ற வினாவுக்கு விடையிறுப்பது சற்றுக் கடினம்தான். இவ்வினாவுக்கு விளக்கம் வேண்டி அகராதிகளையும், கலைக்களஞ்சியங்களையும் புரட்டிப்பார்த்தாலும் ஒரு முழு விளக்கத்தை ஒரு நூலிலிருந்து நாம் பெறமுடியாது. அன்று முதல் இன்றுவரை எத்தனையோ ஆசிரியர்கள் இவ்வினாவை எழுப்பி விளக்கமும் கொடுத்துள்ளனர். ஆனால் அவ்விளக்கங்கள் ஒவ்வொன்

றும் முழுமை வாய்ந்ததாகக்கூறமுடியாது. இவ்விளக்கங்கள் அனைத்தும், பல குருடர்கள் யானைபற்றிக் கூறிய கதையையே நம்முன் கொண்டுவந்து நிறுத்துகின்றன. அவரவர் மனநிலைக்கேற்ப எது எது முக்கியம் எனக் கருதினார்களோ அது அதைக் கூறியுள்ளனர். அதனால் இலக்கிய மாணவர்கள் வெவ்வேறு ஆசிரியர்களின் விளக்கங்கள் அனைத்தையும் கண்டு ஒரு முடிவுக்கு வர வேண்டிய நிலையில் உள்ளனர்.

பிழை காணுதல்:

சிலர் திறனாய்வு என்பது வெறும் பிழை காணுதல் என்று எண்ணுகின்றனர். [1] ஒரு நூலைப்பற்றித் திறனாய்வு செய்யும்போது அந்நூலிலுள்ள குற்றம் குறைகளைக் காணுதல் ஒன்றையே முழு முதல் நோக்கமாகக்கொள்ளுகின்றனர். இத்தகைய திறனாய்வாளர்களைக் குறைகூறுபவர்கள். [2] என்பர். ஆசிரியர்களின் குறைகள் இவர்களால் வெளிப்படுத்தப்படுமேனும் அவர்கள் நிறை வெளிப்படுத்தப்படா.

> குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்

என்ற வள்ளுவர் வாக்குக்கு விலக்காக இவர்கள் பணிபுரிகின்றனர். இத்தகைய திறனாய்வினைப் பயிலும் மாணவர்கள் அந்நூலின் குற்றங்களையே அறிவதால் அந்நூலைப் படித்தல் வேண்டும் என்ற ஆர்வத்தை இழந்துவிடுகின்றனர். ஆகவே திறனாய்வின் உண்மையான நோக்கம் மறைந்து விடுகிறது. சிறந்த இலக்கியங்கள் தோன்றவும் அவைகளைப் படித்துப் பயன் அடையவும் பிழை காணுதல் இன்றியமையாததுதான். ஆனால் அதனையே திறனாய்வு என்று கருதி "எங்கே குறை?" என்று நூலைத் துருவித் துருவிப் பார்த்து அவற்றை மட்டும் பெரிதாக்கிக் கூறுதல்

---

1 His business is to discover imperfections.

2 Carper ... Caviler.

நன்மை பயக்காது. அது உண்மைநிலையினைக் கூறுவதும் ஆகாது. அது திறனாய்வின் நோக்கமும் அன்று. [1]

மதிப்பிடுதல் :

திறனாய்வுக்கு விளக்கம் தருகின்ற பல ஆசிரியர்கள் "மதிப்பிடுவதே திறனாய்வு" என்று கொண்டுள்ளனர். "இலக்கியம் அல்லது கலைப்பொருளின் பண்பையும் தன்மையையும் மதிப்பிட்டுக்காண்பதே திறனாய்வுக்கலை" என்பது அவர்கள் கொள்கையாகும். திறனாய்வினைக்குறிக்கும் [2] "Criticism" என்ற ஆங்கிலச் சொல் "Kpivev" என்ற கிரேக்கச் சொல்லின் அடிப்படையில் உண்டானதாகும். இக்கிரேக்கச் சொல்லுக்குத் "தீர்மானித்தல், மதிப்பிடுதல், தரம் பிரித்தல்" [3] என்ற பல பொருட்கள் உண்டு. ஆகையால் 'மதிப்பிடுதல்.' என்ற கொள்கையிலேயே திறனாய்வு தோன்றிற்று என்று கருத இடம் இருக்கிறது.

இவ்வாறு ஒருநூலை மதிப்பிட வேண்டுமாயின் அத் திறனாய்வாளன் சிறந்த அறிவும் அதற்கேற்ற நிலையினையும் உடையவனாக அமைதல் வேண்டும். இந்நிலையை உடையவன் செய்து காட்டுவதுதான் சிறந்த திறனாய்வாக அமைய முடியும். மேலும் அவன் நூலின் குற்றம் காணுவதோடு மட்டுமன்றி அதன் அழகினையும், சிறப்பினையும் ஒருங்கே எடுத்துக்காட்டுபவனாக அமைய வேண்டும். எனவே திறனாய்வு என்பது அந்நூலை ஆராய்வதற்குரிய கூர்த்த

---

1. The end of literary criticism is not fault finding but truth. The critic should be more than a censor or cavilter.

2. Criticism is the art of estimating the qualities and charaecter of literary or artistic work. (The new English Dictionary).

3. To decide; To pass Judgement; To Separate,

அறிவு தகுதி முதலியன கொண்ட ஒருவனால் அந்நூலின் அழகு குறை முதலியனவற்றைக் கண்டு மதிப்பிடுவது" [1] என்பது இவர்கள் கொள்கையாகும்.

குறை கூறுதலும் புகழ்தலும்:

ஒரு நூலை மதிப்பிடும்போது அதன் நிறை குறை காணவேண்டும் என்று கூறினோம். இந்த நிலையையடையும்போது சில திறனாய்வாளர்கள் தவறி விடுகின்றனர். அரசியல் கொள்கை, சமூகக்கொள்கை, தனி மனித உணர்ச்சியின் விருப்பு வெறுப்பு இவைகளின் காரணமாகச் சிலர் நூற்களை மதிப்பிடும்போது குறைகளை மிகைப்படுத்துகின்றனர். இன்னும் சிலர் நிறைகளை மிகைப்படுத்துகின்றனர். இந்த இரண்டு நிலைமையும் திறனாய்வினின்றும் ஒழிய வேண்டும், தமிழ்நாட்டுத்திறனாய்வு இந்த இரண்டு நிலைகட்கும் எத்தனையோ எடுத்துக்காட்டுகளைத்தந்து நிற்கிறது.

ஒரு நூலின் நிறைகளைக் கூறாமல் குறைகளைமிகைப்படுத்தித் திறனாய்வு செய்யும்போது அந்நூலின் உண்மை நிலையினை உணரமுடியாதநிலை படிப்போரைப் பொறுத்த மட்டில் உண்டாகிறது. மேலும் அந்நூலைப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் அது போக்கடித்து விடுகிறது. ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில் இது வேறொரு விதமான தீமையை விளைவிக்கிறது. இத்தகைய திறனாய்வினைக்காணும்போது ஆசிரியர்களின் உள்ளங்கள் சலித்து விடுகின்றன. மேலும் மேலும் படையல் இலக்கியங்களைச் சமைக்க வேண்டுமென்ற ஆர்வத்தைக் கெடுத்து விடுகிறது. இந்த நிலை ஏற்படுமானால் அஃது இலக்கிய வுலகத்துக்கே-அதனால் நாட்டுக்கே பெருங்கேடாக விளையும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். (தொடரும்)

---

1 Criticism is the art of judging or evaluating with knowledge and propriety, the beauties and faults of works of art or literature.

45

உலகச் சமயங்கள்

(கி. பழநியப்பன்)

6. இசுலாம், சமயம் (315-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கி. பி. 570-ஆம் ஆண்டில் மெக்கா நகரில் ஒரு செல்வர் குடியில் முகம்மது என்பவர் பிறந்தார். அவர் பிறந்த பொழுதும் குழந்தையாய் இருந்தபொழுதும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றிப் பல கதைகள் உண்டு. அவர் பிறந்தவுடன் அராபியர்கள் மெக்காவில் வழிபட்டுவந்த தெய்வங்களின் சிலைகளெல்லாம் ஆட்டங்கொடுத்துக் கீழே சாய்ந்தன என்று கூறப்படுகின்றது. மற்றுமோர் கதை அவர் பிறந்ததும் வானத்தைப்பார்த்து "அல்லாவினும் தெய்வம் வேறில்லை, முகம்மதுவே அல்லாவின் தூதுவர்" என்று கூறியதாகக் கூறுகின்றது.

முகம்மது ஆறும் வயதிலேயே தன்னுடைய தாயையும் தந்தையும் இழந்து விட்டார். தந்தையின் உடன் பிறந்தவர்களில் ஒருவரான அபூதாலித் என்பவரே முகம்மதுவை வளர்த்து வந்தார். சற்று வயது வந்தவுடன் ஆடுகள் மேய்ப்போர்களுக்குத் துணையாக முகம்மது அனுப்பப்பட்டார். அத்தொழிலில் பெற்ற ஊதியத்தைக் கொண்டே அவர் வாழ்க்கை நடத்தவேண்டியிருந்தது. அதனால் ஓர் ஆசிரியரை நாடிப் படிப்பதற்கு வசதியில்லாது இருந்தார். ஆடுகள் மேய்த்துக்கொண்டிருந்த பாலைவனமே அவருடைய பள்ளியாகவும், பகலில் ஞாயிறும் இரவில் விண் மீன்களுமே அவருடைய ஆசிரியர்களாகவும், தனிமையே அவருடைய ஏடுகளாகவும் விளங்கின.

பின்பு ஆடு மேய்க்கும் தொழிலை விட்டுப் பாலைவன வழிகாட்டித் தொழிலை மேற்கொண்டார் முகம்மது. அராபிய வணிகர்கள் தங்கள் விற்பனைப் பொருட்களை ஒட்டகங்

களில் ஏற்றிக்கொண்டு கூட்டங்கூட்டமாக எகிப்து, ஈரான், சிரியா முதலிய நாடுகளுக்குச் செல்வர். அராபியப் பாலை வனத்தைக் கடந்துதான் இந்நாடுகளுக்குச் செல்ல வேண்டும். பாலைவனத்தில் திக்குத்திசைகளை எளிதில் கண்டு கொள்ளமுடியாது. அனுபவம் பெற்ற வழிகாட்டிகளின் உதவியைக்கொண்டுதான் செல்ல முடியும். முகம்மது இவ் வழிகாட்டித் தொழிலில் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆகவே ஒட்டகக் கூட்டங்களுக்கு வழிகாட்டிச்செல்ல மெக்காவிலுள்ள வியாபாரிகள் அவரையே விரும்பி அழைப்பர்.

மெக்கா நகரில் கதீச்சா எனும் ஒரு விதவை இருந்தாள். அவளிடம் அதிகமாகச் செல்வம் இருந்தது. அத்துடன் வேலை ஆட்களை வைத்து வணிகமும் நடத்தி வந்தாள். ஒரு முறை சிரியாவிற்குத் தன்னுடைய பொருள்களை அனுப்ப முகம்மதுவை வழிகாட்டியாக அமர்த்தச் செய்தாள். அத்துடன், கொண்டு போகும் பொருள்களை விற்று அதற்கு மாற்றுப் பொருள்களாகப் பட்டு முதலியன வாங்கி வரும் பொறுப்பையும் முகம்மதுவிற்கே கொடுத்தாள். முகம்மதுவும் அதையேற்று அவ்வாறே சிரியாவிற்குச் சென்று வாணிபப் பொருள்களை விற்றுப்பட்டு முதலியன வாங்கிக் கொண்டு குறித்த நாளில் திரும்பி வந்தார். கதீச்சாவிடம் கணக்கை ஒப்புவிப்பதற்காக நேரில் சென்றார்.

முகம்மது கதீச்சாவை அப்பொழுதுதான் முதன் முதலாகப் பார்க்கின்றார். கதீச்சாவிற்கு வயது நாற்பது; மூன்று குழந்தைகள் உண்டு. கணவனை இழந்த விதவையானாலும் கதீச்சா அழகிய தோற்றமும் நல்ல உடற்கட்டுமுள்ளவளாக இருப்பதைக் கண்ட முகம்மது மிக்க வியப்படைந்தார். அது போன்றே கதீச்சாவும் முகம்மதுவின் உடற்கட்டையும், தோற்றத்தையும், பேச்சையும், நடந்துகொண்ட விதத்தையும் கண்டு மெய் மறந்தாள். அன்று மாலையே கதீச்சாவினிடமிருந்து தூதர்கள் வந்து முகம்மதுவை அணுகி, கதீச்சா அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்வ

வதைக் கூறினார்கள். முகம்மதுவும் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். அப்பொழுது அவருக்கு வயது இருபத்தி யைந்து. முகம்மதுவிற்கும் கதீச்சாவிற்கும் மணம் நடை பெற்றது. அதன் மூலம் வழிகாட்டியாக இருந்த முகம்மது பெரிய வணிகராகவும், மெக்காவிலேயே தலையான செல்வ ராகவும் விளங்கினார்.

பதினைந்து ஆண்டுகள் மனைவியுடன் இன்ப வாழ்க்கை நடத்துவதிலும், செல்வத்தைப் பெருக்குவதிலும் ஈடுபட்டி ருந்தார் முகம்மது. இருந்தாலும் அவருடைய மனதில் அரபியர்களிடைய இழிவான நிலையைப்பற்றிய எண்ணம் எப்பொழுதும் இருந்துகொண்டே இருந்தது. உருவவழி பாடும், குடிப்பழக்கமும், சூதாட்டமும் விந்நாட்டிலிருந்து என்று நீங்குமோ என்று ஏங்கிக்கொண்டிருந்தார்.

முகம்மதுவிற்கு எழுதப்படிக்கத் தெரியாது என்றாலும் தன்னுடைய மனைவியின் ஓர் உறவினரைக் கொண்டு பல நூல்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பதில் மிக ஆவலுள்ள வராக இருந்தார். யூதர்களின் சமய நூல்கள், வரலாறு, கிறித்துவர்களின் சமய நூல்கள் முதலியவை களைப் படிக்கக் கேட்பார். தன்னுடைய வணிகச் சுற்றுப்பயணங்களில் யூதர்கள் கிறித்தவர்களைப் பற்றிய பல செய்திகளைக் கேள்விப்பட்டுள்ளார். அவைகளைப்பற்றிய பல எண்ணங்கள் தோன்றி அடிக்கடி முகம்மதுவை ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடச் செய்தன. மெக்கா நகருக்கு அடுத் துள்ள குன்றுகளுக்குச் சென்று தனிமையாக இருந்து சிந் திப்பதில் மன அமைதியைக் கண்டார் முகம்மது. இவ்வாறு அடிக்கடி குன்றுகளை நாடிச்சென்று மணிக்கணக்காகத் தனிமையில் சிந்திக்கத் தொடங்கினார். ஒருநாள் அவருக்கு ஒளி தோன்றியது. குன்றுகளின் நடுவே தனிமையாக இருக்கும் பொழுது தேவதூதன் ஒருவன் தோன்றினான். பொன் தகடு ஒன்றைக்காட்டி ''நான்தான் கபீரியேல், இதி லுள்ள எழுத்துக்களைப்படி'' என்று கூறிற்று. 'எனக்குப்

படிக்கத் தெரியாதே' என்ருர் முகம்மது. 'படி தெரியும்' என்று உத்திரவிட்டார் கபீரியேல். எழுத்துக்களை அறியாத முகம்மது படிக்கத் தொடங்கினுர். படிக்கவும் செய்தார். அத்தகட்டில் அவர் கண்ட வரிகளில் சில:

'போர்த்திக்கொண்டிருப்பவனே! எழுந்திரு! எச்சரி!
உனது ஆண்டவன் பெருமை செய்வார்,
உனது ஆடைகள் தூய்மை செய்யும்.
வெறுப்புகள் அகன்றுவிடும்
உனது ஆண்டவனை எதிர்பார்க்கவும்

இது போன்ற பல வரிகள் எழுதப்பட்டிருந்ததை முகம்மது படித்தார். கபீரியேலும் எழுத்துக்களும் சிறிது நேரத்தில் மறைந்தன. முகம்மது வீட்டிற்கு விரைந்து சென்று நடந்த வற்றைத் தன் மனைவியிடம் கூறினுர். அவை அனைத்தும் உண்மையென்பதைக் கதீச்சாவும் நம்பினுள். மேலும் கணவனை இவ்வாறு அடிக்கடி கபீரியேலுடன் தொடர்பு கொள்ளவும் தூண்டிவந்தாள். முகம்மதுவும் அவ்வாறே செய்து கபீரியேலிடமிருந்து ஒவ்வொரு முறையும் பல அரிய சொற்களைக் கேட்டுவந்து மனைவியிடம் கூறுவர். தான் கேட்ட அருள்மொழிகளை மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டுமென்று கருதினுர். முதலில் தன்குடும்பத்தினர்களுக்கும் உறவினர்களுக்கும் சொல்லி வந்தார். பின்பு மெக்காவின் ஆலயத்திற்குச் சென்று அங்கு வழிபட வருபவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினுர்.

"அல்லாவினும் தெய்வம் வேறில்லை. முகம்மதுவே அல்லாவின் தூதுவர்" என்பதே அவர்போதனையின் அடிப்படை. அராபியர்கள் பலஉருவங்களை வழிபடுபவர்கள். முகம்மதுவின் போதனையை அவர்கள் ஏற்கவில்லை. அல்லா ஒருவரே தெய்வம் என்பதற்கு ஏதாவது சான்று காட்ட முடியுமா என்று கேட்டனர். முகம்மது விண்ணையும் மண்ணையும், ஞாயிற்றையும், திங்களையும், மலைகளையும், நதிகளையும் காட்டி இவையனைத்தையும் படைத்தவன் ஆண்டவன்

அல்லா என்ருர். மக்கள் அதை ஏற்காது முகம்மதுவை ஏளனம் செய்தனர். "விண்ணுலகத்தில் நடைபெறுவன வற்றைப் பார்த்தவன், அதோ போகின்ருன்" என்று நகை யாடினர். அவைகளைப் பொருட்படுத்தாது முகம்மது தன்னுடைய கொள்கைகளைப் போதித்துக் கொண்டே இருந்தார். குடிப்பழக்கம், சூதாடும் பழக்கம் • உருவங்களை வழிபடுதல் முதலியவற்றை வன்மையாகக் கண்டித்து வந்தார். முகம்மதுவின் பேச்சை மக்கள் பொருட்படுத்தாது அவர்கள் இச்சைப்படியே நடந்து வந்தனர். பின்னர் காபா ஆலயத்தையும் இசுமேல் ஊற்றுநீரையும் மெக்காவிலுள்ள வணிகர்கள் தங்களுடைய வருமானத்திற்காகப்பயன்படுத்தி வந்ததை முகம்மது கண்டிக்கத்தொடங்கிஞர். இச்செயல் மெக்கா வணிகர்களின் கோபத்தை மூட்டியது. முகம்மதுவைக் கண்டிக்கத் தொடங்கினர். தங்கள் செயல்களில் தலையிட்டால் முகம்மதுவின் உயிருக்கே ஆபத்துஏற்படுமென்று எச்சரித்தனர். ஆஞல் முகம்மது அவைகளுக்கெல்லாம் அஞ்சாது 'உயிர் போயினும் தாம் போதிப்பதை நிறுத்த முடியாது' என்று கூறிவிட்டார். முகம்மதுவின் விடாமுயற்சியின் பயஞகச் சிலர் அவருடைய கொள்கைகளின்படி நடப்பதற்கு முன்வந்தனர். அக்கொள்கைகளுக்கு இசுலாம்எனப் பெயரிடப் பெற்றது. இசுலாம் என்ருல் அல்லாவின் ஆணைகளுக்குப் பணிகின்றேன் என்பது பொருள். இசுலாம் கொள்கையைப் பின்பற்றுவோர்களுக்கு முசல்மான்கள் என்று பெயர்.

முகம்மதுவின் போதனைகளையும் அறவுரைகளையும் அபுபேக்கர் என்பவர் அவ்வப்பொழுது எழுதிக்கொண்டு வந்தார். தேவதூதர் கபிரியேல் மூலமாகவே முகம்மது தன் கருத்துக்களைப் பெற்றுவந்தார் என்பது அவர்கள் நம்பிக்கை. முகம்மதுவைப் பின்பற்றுபவர்கள் தொகை அதிகமாக அதிகமாக மெக்கா வணிகர்களின் சீற்றமும் அதிகரித்தது. அதைத் தடுப்பதற்காக ஒரு சட்டம் இயற்

றினர். அதன்படி இசுலாமிய சமயத்தைச் சேர்ந்தவர்களை மெக்கா நகரிலிருந்து விரட்டுவதற்கு அதிகாரம் பெற்றனர். அதனால் முகம்மது தன்னுடைய கொள்கைகளைக் கைவிட வில்லையென்றாலும் அவரைப் பின்பற்ற ஒருவரும் முன் வர வில்லை. இந்நிலையில் முகம்மதுவிற்கு உறு துணையாக இருந்த அவருடைய மனைவி கதீச்சா காலமானாள். முகம் மது தளர்ச்சியடையாது தன்னுடைய கொள்கைகளைக் கூறிக்கொண்டே இருந்தார்.

மெக்கா நகரில் இசுலாம் சமயத்தைப் பின்பற்ற விரும் புபவர்களைச் சட்டம் தடைசெய்தபடியால் முகம்மது வேறு ஊருக்குச் செல்ல விரும்பினார். எழுபது மைல்களுக்கு அப் பாலுள்ள தாயிப் (Taif) என்ற நகருக்குச் சென்றார். அது திராட்சைத் தோட்டங்கள் நிறைந்த ஊர். அந்நகரின் முக் கிய வணிகம் திராட்சையிலிருந்து மதுபானங்கள் தயாரிப் பதேயாகும். அதனால் முகம்மதுவின் கொள்கைகளில் ஒன்றான குடிப்பழக்கத்தையொழிக்கவேண்டுமென்பதை அவர் கள் விரும்பவில்லை. ஆகவே அவரை அந்நகரிலிருந்து விரட்டி விட்டனர். முகம்மது மெக்காவிற்குத் திரும்பிவந்தார்.

ஒருநாள் மெக்காவிற்கு இருநூறு மைல்களுக்கு அப் பாலுள்ள யாதிரிப் (Yathrib) என்னும் ஊரிலிருந்து சில வழிப்போக்கர்கள் முகம்மதுவைச்சந்தித்தனர். இசுலாம்சம யக்கொள்கைகளைக் கேட்டனர். ஊர் திரும்பினர். அடுத்த ஆண்டு யாதரிப்பிலிருந்து எழுபத்துஐந்துபேர்கள் வந்து முகம்மதுவைக் கண்டு அவர்களை இசுலாமியச் சமயத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டினர். முகம்மதுவும் மகிழ்ச்சியுடன் அவர்களை ஏற்று இசுலாமியக் கொள்கை களை விளக்கிக் கூறினார். அவர்களில் பன்னிரண்டு பேர்க ளைத் தேர்ந்தெடுத்து யாதிரிப் நகரிலும் மற்ற இடங்களிலும் இசுலாம் கருத்துக்களைப் பரப்பச்சொன்னார்

இவ்வாறு முகம்மது தன்னுடைய கொள்கை களை யாதிரிப் நகரில் பரப்புவதற்கு ஏற்பாடு செய்துள் ளதை மெக்கா வணிகர்கள் விரும்பவில்லை. அம்முயற்சியை ஆரம்பத்திலேயே தடுக்கத் திட்டமிட்டனர். முகம்மது

வைக்கொன்று விடுவதென முடிவு செய்தனர். சதிசெய்தனர். நாளும் குறிப்பிட்டனர். முகம்மது இதை எவ்வாறோ தெரிந்துகொண்டார். அன்றிரவே தன்னுடைய பெயர் பெற்ற ஒட்டகமான அல்-கசுவாவுடன் மெக்காவிலிருந்து தப்பியோடினார். அப்பொழுது முகம்மதுவிற்கு வயது ஐம்பத்தி மூன்று.

முகம்மது அவ்வாறு யாதிரிப் நகருக்குத் தப்பியோடிய நாள் இசுலாம் சமயத்தில் மிக முக்கிய நாளாகும். முகம்மதியர்கள் ஆண்டுகள் அன்று முதல்தான் கணக்கிடப்படுகின்றன. (வளரும்)

சங்கச் செய்திகள்

மதுரைத் தமிழ்ச்சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்

—*—

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௧ பங்குனித்திங்கள் ௪ ஆம் நாள் (17—3—60) மாலை 7 மணிக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயற்குழு வுறுப்பினர்கள் (Managing Committee) கூட்டம் உயர்திரு. பி. அரங்கசாமி நாயுடு B. A, B. L. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. தமிழகத்தின் தனிப்பெருஞ் சான்றோர்களும், தமிழ்ப்பெரும் பேராசிரியர்களுமாகிய திரு. சா. சோமசுந்தரபாரதியார், திரு. மு. இராகவையங்கார், திரு. T. V. சதாசிவப்பண்டாரத்தார் எனும் மூவரும் காலஞ்சென்றமை குறித்து அன்னாரது உறவினர்கட்கும், நண்பர்கட்கும் இக்குழு தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்கின்றது.

2. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துச் செனட் சபைக்குரிய உறுப்பினராக, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தமிழவேள் உயர்திரு பி. டி. இராசன் (B. A. Bar-at-law, M. L. C.) அவர்களை இக்குழு தேர்ந்தெடுக்கின்றது.

முன்மொழிந்தவர் பி. அரங்கசாமி நாயுடு
வழிமொழிந்தவர் வி. சண்முகசுந்தரம்

மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை. } செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரு.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	களநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	8	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினா விடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	—	0	3	0
33.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினர்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 விதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு-மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு விதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law. M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.